بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 08/01/2021 அன்று இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

**வக்ஃபே ஜதீத் சந்தாவின் 64 வது ஆண்டிற்கான அருளுக்குரிய அறிவிப்பு மற்றும் உலகளாவிய ஜமாஅத்துகளிலுள்ள அஹ்மதிகளின் பொருட் தியாகங்களின் ஈமானை வலுவூட்டக் கூடிய நிகழ்வுகள்**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۱﴾ اَلۡحَمۡدُ لِلّٰہِ رَبِّ الۡعٰلَمِیۡنَ ﴿۲﴾ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۳﴾ مٰلِکِ یَوۡمِ الدِّیۡنِ ﴿۴﴾ اِیَّاکَ نَعۡبُدُ وَ اِیَّاکَ نَسۡتَعِیۡنُ ﴿۵﴾

اِہۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِیۡمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِیۡنَ اَنۡعَمۡتَ عَلَیۡہِمۡ ۬ۙ غَیۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَیۡہِمۡ وَ لَا الضَّآلِّیۡنَ ﴿۷﴾

مَنۡ ذَا الَّذِیۡ یُقۡرِضُ اللّٰہَ قَرۡضًا حَسَنًا فَیُضٰعِفَہٗ لَہٗۤ اَضۡعَافًا کَثِیۡرَۃً ؕ وَ اللّٰہُ یَقۡبِضُ وَ یَبۡصُۜطُ ۪ وَ اِلَیۡہِ تُرۡجَعُوۡنَ ﴿۲۴۶﴾

**"அல்லாஹ்வுக்கு சிறந்த கடனைக் கொடுப்பவர் யார்? அதன் காரணமாக, அவன் அவருக்கு அதனைப் பன்மடங்காகப் பெருகச் செய்வான். அல்லாஹ் ரிஸ்கைக் கட்டுப்படுத்தியும் கொடுக்கின்றான்; விரிவாகவும் வழங்குகின்றான். நீங்கள் அவனிடமே திரும்பவும் கொண்டு செல்லப்படுவீர்கள்." (அல் பகரா : 246)**

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:- இந்த வசனத்தில், அல்லாஹ்வுக்கு கடன் கொடுப்பது பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. கடன் எனும் சொல்லின் அகராதி பொருள் 'நல்ல அல்லது தீய கைமாறும்' ஆகும். இங்கு இதன் பொருளாவது, அல்லாஹ்வின் வழியில், 'அல்லாஹ் தனக்கு அதற்கான சிறந்த வெகுமதி வழங்குவதற்காக செலவு செய்பவர் யார்?' என்பதாகும். ஆக, அல்லாஹ்வுக்காக செலவு செய்கின்றோம்; அல்லாஹ்வுக்குக் கொடுக்கின்றோம் என்றால், அல்லாஹ் அதற்கான சிறந்த வெகுமதி வழங்குகின்றான்.

திருக்குர்ஆனில் பலவிடங்களில், பொருட்தியாகங்கள் பற்றி அல்லாஹ் குறிப்பிட்டுள்ளான். அல்லாஹ்வின் மார்க்கத்திற்காக அல்லது அல்லாஹ்வின் படைப்பினங்களின் மேம்பாட்டுக்காக செலவு செய்வதை, அல்லாஹ்வுக்காகவே செலவு செய்வதற்கு நிகராக வைக்கப்பட்டுள்ளது. அல்லாஹ்வுக்காக செலவு செய்யப்படுவது வீண்போவதில்லை. மாறாக, இது எத்தகைய கடன் என்றால், அதை அல்லாஹ் பன்மடங்கு அதிகரித்துத் திருப்பிக் கொடுக்கின்றான்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:-

"அல்லாஹ் கடன் கேட்பதன் மூலம், 'அல்லாஹ்வுக்குத் தேவை இருக்கிறது; அவன் தேவையுடையவன்' என்பது பொருளாகாது. நவூதுபில்லாஹ்! (அவ்வாறு பொருள் கொள்வதிலிருந்து நாம் அல்லாஹ்விடம் பாதுகாப்பு தேடுகின்றோம்.) இவ்வாறு கற்பனை செய்வது கூட 'குஃப்ர்' அதாவது, நிராகரிப்பாகும். மாறாக, இதன் பொருள், 'வெகுமதியோடு திருப்பித் தருவேன்' என்பதாகும்."

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:-

"இங்கு கடன் என்பதன் பொருள், 'அல்லாஹ்வுக்கு நற்செயல்களைக் கொடுப்பவர் யார்?' என்பதாகும். அல்லாஹ் அவர்களுக்கான வெகுமதியை அதைவிடப் பன்மடங்கு அதிகரித்துத் தருகிறான். எந்த நற்செயலாகவும் இருக்கட்டும், அல்லாஹ்வுக்காக செய்தீர்கள் என்றால், அல்லாஹ் அதை அதிகரித்துத் தருகிறான். அவனது மேன்மையோ இவ்வாறு இருக்கிறது:-

ஒருவர் அணுவளவு நன்மை செய்தாலும் அதற்கும் வெகுமதி வழங்குகின்றான். அணுவளவு தீமை செய்தாலும் அதற்கான இறுதி முடிவும் கிடைக்கும். ஆனால் நிபந்தனை என்னவென்றால், நல்ல நிய்யத்தோடு இறைவனின் தன்னிறைவைப் பெறுவதற்காகத் தியாகம் செய்ய வேண்டும். மேலும், அதற்காக ஏனைய கட்டளைகளையும் நன்மைகளையும் கூட செயலாற்ற வேண்டும்.

பொருள் மட்டும் கொடுத்து விட்டு, 'நான் மிக அதிகமாகத் தியாகம் செய்து விட்டேன்; மற்ற கடமைகளை(யும்) நிறைவேற்றி விட்டேன்' என்று நினைத்துக் கொள்வது கூடாது. மற்ற நன்மைகளை செயலாற்றுவதும் அவசியமாகும். ஒரு வியாபாரியைப் போன்று, 'அதற்கான இலாபத்தைப் பெறவேண்டும்; அல்லாஹ்வின் வழியில் கொடுக்கலாம் இலாபம் கிடைத்து விடும்' என்ற சிந்தனையோடு மட்டும் பொருள் தியாகம் செய்யக்கூடாது.''

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:-

''நான் தற்போது சில அஹ்மதிகளின் சம்பவங்களை எடுத்துரைக்கின்றேன். அவர்கள் அல்லாஹ்வின் இந்தக் கட்டளையிலிருந்து அருள் பெற்றார்கள். பெரும்பாலும் எத்தகைய சம்பவங்கள் உள்ளனவென்றால், அவற்றில் அவர்கள் கலப்பற்ற முறையில் அல்லாஹ்வுக்காகத் தியாகம் செய்தனர். வியத்தகு முறையில், அவர்களின் தேவைகளை அல்லாஹ் நிறைவேற்றியதோடு, அதிகரித்தும் கொடுத்தான்.''

கினி கினாக்கிரியுடைய சத்ர் மற்றும் முபல்லிஃக் இன்சார்ஜ் அறிவிக்கின்றார்கள்:-

''அவர்கள் என்னுடைய கடந்த வருட வக்ஃபே ஜதீத் குத்பாவை பள்ளிவாசலில் வாசித்துக் காட்டினார்கள். அதில் நான் பொருட் தியாகத்தின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்திருந்தேன். ஜுமுஆ தொழுகைக்குப் பிறகு, வறியவரான ஒரு கலப்பற்ற அஹ்மதி மூஸா கபா சாஹிப் தமது பாக்கெட்டில் இருந்த பணத்தையெல்லாம் மிகவும் கலப்பற்ற முறையில் வக்ஃபே ஜதீத் சந்தாவில் செலுத்தி விட்டார். ஆனால், அவர் இதற்கு முன்னரே சந்தாவை செலுத்திவிட்டிருந்தார். அவரிடம், 'இதிலிருந்து சிறிது பணத்தை வைத்துக் கொள்ளுங்கள்; நீங்கள் வீட்டிற்கும் செல்லவேண்டும்; நீங்கள் பாக்கெட்டிலிருந்து எல்லாவற்றையும் எடுத்துக் கொடுத்து விட்டீர்கள்; உங்களிடம் வழிச்செலவுக்குக் கூட பணம் இல்லை!' என்று கூறப்பட்டது. அப்போது அவர், ''நீங்கள் கேட்கவில்லையா? ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள், 'ஓர் உள்ளத்தில் இரு நேசங்கள் ஒன்றிணைய முடியாது' என்று கூறியுள்ளார்கள். எனவே, இன்று என்னை அல்லாஹ்வின் மீதான நேசத்தில் வாழவிடுங்கள்'' என்று கூறிவிட்டு, மகிழ்ச்சியோடு நடந்தே தமது வீட்டிற்குச் சென்றுவிட்டார்.''

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:-

''இவையே அந்தக் காட்சிகளாகும். அவற்றைப் பார்த்து உள்ளம் அல்லாஹ்வைப் புகழ்வதால் நிரம்பிவிடுகிறது. எத்தகைய கலப்பற்ற ஜமாஅத்தை அல்லாஹ் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு வழங்கியுள்ளான்!

மக்கள் குத்பாக்களைக் கேட்கின்றனர். கேட்டுவிட்டு, 'நாங்கள் கேட்டுவிட்டோம்' என்று கூறுகின்றனர். ஆனால், அதன் ஆழத்திற்குள் செல்வதில்லை. கவனமாகக் கேட்பதில்லை.'' ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:-

''இதுவே ஆழமாக ஒரு விஷயத்தைக் கேட்டு அதன் படி செயல்படுவதற்கான உதாரணமாகும். தியாகத்தின் எத்தகைய வினோதமான காட்சிகள்! ஒவ்வொரு நிலையிலும் அல்லாஹ்வோடு விசுவாசத்திற்கான உடன்படிக்கையை நிறைவேற்றுவதும் எந்த முறையீட்டையும் செய்யாமலிருப்பதும் கூட, பைஅத் நிபந்தனைகளுக்கு ஏற்ப இருக்கும்

விஷயமாகும். நமது எதிரிகள், ‘நாங்கள் ஜமாஅத்தின் பெயரை உலகிலிருந்து அழித்து விடுவோம்’ என்று கூறுகின்றனர். அல்லாஹ்வோடு இத்தகைய அன்பு கொண்டிருக்கக் கூடியவர்களை, விசுவாசம் கொண்டிருக்கக் கூடியவர்களை அழிக்கக் கூடியவர் யார்? பிறகு, இத்தகைய அன்பு கொண்டிருக்கக் கூடியவர்களை அல்லாஹ் தன்னோடு இணைத்துக் கொள்கின்றான். எதிரியின் மண் கூட தென்படுவதில்லை.

இந்தியாவிலிருந்து கமருத்தீன் சாஹிப் அவர்கள் எழுதுகிறார்கள்:-

“நிதியாண்டின் இறுதியில் வக்ஃபே ஜதீத் நாஸிம் சாஹிப் அவர்களுடன் சுற்றுப்பயணம் மேற்கொண்டு கோழிக்கோடு ஜமாஅத்தை அடைந்தேன். அப்பொழுது ஓர் அஹ்மதி ஹனீஃப் சாஹிப் வீட்டிற்கும் சென்றோம். அவர் (சாதாரண) தொழில் செய்து வாழ்க்கை நடத்துகின்றார். அவர்களின் பத்து வயது மகன் தன்னுடைய உண்டியலை எடுத்துக்கொண்டு வந்தான். வக்ஃபே ஜதீத் சந்தாவை செலுத்தியவாறு, அவன் இந்தச் சந்தாவை வக்ஃபே ஜதீதுக்காக ஆண்டு முழுவதும் சேர்த்து வைத்ததாகக் கூறினான். அதைத் திறந்த போது அதில் பெரிய தொகை இருந்தது. நாஸிம் சாஹிப் அவர்கள் அந்த சிறுவனிடம், ‘பொதுவாக, பிள்ளைகள் தமக்குப் பிடித்தப் பொருட்களை வாங்குவதற்காகப் பணம் சேர்ப்பார்கள். நீ ஏன் இதை வக்ஃபே ஜதீத் சந்தாவில் கொடுக்கிறாய்?’ என்று கேட்டார்கள். அந்த சிறுவன் பதிலளித்தான். அதன் பொருள் இதுவாகும்:- அல்லாஹ், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மற்றும் கண்ணியத்திற்குரிய கலீஃபாக்களோ இறை வழியில் செலவு செய்யுமாறு கட்டளையிடுகிறார்கள். எனவே, இந்தத் தொகையை வக்ஃபே ஜதீத் சந்தாவில் கொடுக்கிறேன்.”

இது தான் அஹ்மதி பிள்ளைகளின் தர்பிய்யத். எந்த ஜமாஅத்தின் பிள்ளைகளுடைய சிந்தனை இதுவாக இருக்குமோ; இவ்வாறு தர்பிய்யத் இருக்குமோ, அதற்கு இந்த எதிரிகளால் எவ்வாறு இழப்பை ஏற்படுத்த முடியும்?

அல்பேனியாவின் முபல்லிஃக் சாஹிப் அவர்கள் எழுதுகிறார்கள்:-

“ஒரு தோழர், மைக்லிஸ் பியா சாஹிப் மூன்று வருடங்களுக்கு முன்பு பைஅத் செய்தார். ஒரு நாள் அவர் ஒரு டப்பாவை எடுத்துக் கொண்டு வந்தார். அவர், ‘தாம் ஒரு மாதமாக இந்த டப்பாவை தமது வாகனத்தில், ‘எவ்வளவு மிச்சமாகிறதோ அதை இதில் ஜமாஅத் சந்தாவுக்காகப் போட்டு வருவார்’ என்ற நிய்யத்தில் வைத்திருந்தார். முதல் முறை அவர் நிறைந்த டப்பாவைக் கொண்டு வந்த போது, ஒரு பகுதியைத் தமது நான்கு மாத மகன் சார்பாக தஹ்ரீக்கே ஜதீத் மற்றும் வக்ஃபே ஜதீத் சந்தாவில் கொடுத்து விட்டார். மீதியைத் தன் சார்பாக தஹ்ரீக்கே ஜதீத், வக்ஃபே ஜதீத் மற்றும் கட்டாயச் சந்தாக்களில் செலுத்திவிட்டார். இதற்குப் பிறகு ஒவ்வொரு மாதமும் பண டப்பாவை நிரப்பிக் கொண்டுவருவார். அவர் தமது வசதிக்கேற்ப மிகப் பெரிய தொகையை பொருட் தியாகம் செய்துள்ளார்.”

யூ.கே. விலிருந்து சீனாவின் சத்ர் ஜமாஅத் கூறுகிறார்கள்:-

“எங்களுடைய இலக்கில் பெரும் குறை இருந்தது. நான் இதற்காக தஹஜ்ஜுதில் எழுந்து துஆ செய்து வந்தேன். ஒரு நாள் என்னுடைய மனைவி, ‘நீங்கள் இன்ன நபரிடம் கூறினால், மேற்கொண்டு உங்களுக்கு செலுத்திவிடுவார்’ என்று கூறினார். ஆக, அவர்களோடு தொடர்பு கொள்ளப்பட்ட போது, அந்தக் குடும்பம், ‘எங்கள் பெயரை வெளியிடக்கூடாது’ என்று கூறி ஆயிரம் பவுண்ட் செலுத்திவிட்டார்கள். அது மட்டுமின்றி இன்னோர் ஆயிரம் பவுண்ட் தங்கள் பிள்ளைகள் சார்பாக செலுத்திவிட்டார்கள். பிறகு, ‘இது அல்லாமல், மேற்கொண்டு உங்களுக்குத் தேவைபட்டாலும் சொல்லுங்கள்’ என்று கூறினார்கள்.”

ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் ஃபிரான்ஸ், காஸ்கஸ்த்தான், மாஸ்கோ, சிராலியோன், கர்கீஸ்த்தான், தன்ஸானியா, மலாவீ, ஜெர்மனி, கனடா, புர்கீனாஃபாஸோ

முதலிய நாடுகளின் ஜமாத்துகளுடைய பொருட் தியாகங்களின் உள்ளத்தை ஈர்க்கக்கூடிய, ஈமானை வலுவூட்டக்கூடிய நிகழ்வுகளை எடுத்துரைத்தார்கள்.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:- “இப்போது நான் வக்ஃபே ஜதீதின் புதிய ஆண்டிற்கான அறிவிப்பை செய்தவாறு, கடந்த ஆண்டின் சில புள்ளி விவரங்களை எடுத்துரைப்பேன். அல்லாஹ்வின் அருளால் **63** வது ஆண்டு டிசம்பர் **31, 2020** உடன் முடிவடைந்தது. **64** வது ஆண்டு ஜனவரி **1** லிருந்து ஆரம்பமாகிவிட்டது. அல்லாஹ்வின் அருளால் இந்த ஆண்டு **1,05,30,000** (ஒரு கோடியே ஐந்து லட்சத்து முப்பதாயிரம்) பவுண்ட் பொருட் தியாகம் செய்யும் நல்வாய்ப்பு ஜமாஅத்திற்குக் கிடைத்துள்ளது. இந்த வசூல் கடந்த ஆண்டை விட **8,87,000** (எட்டு லட்சத்து என்பத்தி ஏழாயிரம்) பவுண்ட் அதிகமாகும். அல்ஹம்துலில்லாஹ்!

இந்த ஆண்டும் ஒட்டுமொத்த வசூல் அடிப்படையில், உலக ஜமாஅத்துகளில் பிரிட்டன் முதலிடத்தில் உள்ளது. பிறகு, முறையே ஜெர்மனி, பாகிஸ்தான், கனடா, அமெரிக்கா, இந்தியா, ஆஸ்திரேலியா, மத்திய கிழக்கு நாட்டைச் சேர்ந்த ஒரு ஜமாஅத், இந்தோனேஷியா மற்றும் கானா ஆகிய ஜமாஅத்துகள் உள்ளன.”

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:-

“இந்தியாவின் ஜமாத்துகளில் ஒட்டுமொத்த வசூல் அடிப்படையில், மாநிலங்களின் தரவரிசை இவ்வாறு உள்ளது:- கேரளா, தமிழ்நாடு, ஜம்மு காஷ்மீர், தெலுங்கானா, கர்நாடகா, ஒடிஷா, பஞ்சாப், மேற்கு வங்காளம், தில்லி மற்றும் உத்திர பிரதேசம்.

ஜமாஅத்துகளில்:- கோயம்பத்தூர், காதியான், பத்தப்பிரியம், ஹைதராபாத், கொல்கத்தா, பெங்களூர், கோழிக்கோடு, கன்னூர் டவுன், ரிஷி நகர் மற்றும் கேரங்க்.”

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:-

“அல்லாஹ் தியாகம் செய்யக்கூடிய இந்த அனைவரின் செல்வங்களிலும் வாழ்நாளிலும் அளவற்ற பரக்கத் ஏற்படுத்துவானாக! இவர்களுக்கு ஆன்மீகத்தில் முன்னேற்றமும் வழங்குவானாக! இறைவனுக்கான உரிமைகளையும் அடியார்களுக்கான உரிமைகளையும் செலுத்தக்கூடியவர்களாக இருப்பார்களாக!

இன்றைய நாட்களில் பாகிஸ்தானின் அஹ்மதிகளுக்காகவும் குறிப்பாக துஆ செய்யுங்கள். அல்லாஹ் அவர்களின் சிரமங்களை அகற்றுவானாக! அவர்களின் பிரச்சினைகளை அகற்றுவானாக! எதிரிகளின் கைகள் அவர்கள் வரை எட்டுவதிலிருந்து தடுப்பானாக! எந்த எதிரிகளின் சீர்திருத்தம் ஏற்படாதோ அல்லாஹ் அவர்களைப் பிடிப்பதற்கான ஏற்பாட்டை செய்வானாக! இறைவழியில் சிறை சென்றவர்கள் விரைவில் விடுதலையாவதற்கும் வழி செய்வானாக!

அதில் அல்ஜீரியாவைச் சேர்ந்த இறைவழியில் சிறை சென்றவர்களும் உள்ளனர். குறிப்பாக துஆக்கள் நஃபில்கள் மற்றும் சதக்காக்களில் அழுத்தம் கொடுங்கள். பாகிஸ்தானுக்காகவும் துஆ செய்யுங்கள். அல்லாஹ் அங்கு அமைதி நிலையை உருவாக்குவானாக! ஒருவர் மற்றவருடைய கழுத்துகளை வெட்டுவதில் மூழ்கியுள்ள நிலை, தீவிரவாதம், சண்டை சச்சரவு மற்றும் குழப்பம் ஆகியவற்றை விரைவில் முடிவுக்குக் கொண்டு வருவதற்கான ஏற்பாட்டை செய்வானாக! இவ்வாறே மிக வேகமாக சீர்கெட்டுக் கொண்டிருக்கக்கூடிய உலகின் பொதுவான நிலைமைக்காகவும் துஆ செய்யுங்கள். அல்லாஹ் முழு மனித குலத்தின் மீதும் அருள் புரிவானாக!

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا
هَادِيَ لَهٗ وَنَشْهَدُ اَنْ لَّآ اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رحمكم الله اِنَّ اللّٰهَ يَأْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِي الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ
وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

**(தமிழாக்கம்: மவ்லவி அத்தாவுல் முஃக்னி)**